3994

உ

திருச்சிற்றம்பலம்.

# ஞானமிர்தக்கட்டளை.

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும்
ஆகிய
சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரால்
பரிசோதிக்கப் பெற்றது.

ACL-FTS
00374

"செந்தமிழ்"ப் பிரசுரம்—௩௰

[இரண்டாம் பதிப்பு.]

மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலை

1923.

விலை அணா-3.

உ

சிவமயம்.

# ஞானாமிர்தக்கட்டளை.

பதி, பசு, பாசங்களுக்கிலக்கணங் கூறுவாம்.

பசுக்கள் சுதந்திரமில்லாதவைகளாதலாலும், பாசங்கள் சடமாயிருக்கையினாலும், பதி சுதந்திரஞான முடைமையாலு முதலிற் பதிக்கு, மிரண்டாவது பசுக்களுக்கு, மூன்றாவது பாசங்களுக்குமிலக்கணங் கூறத் தொடங்கி, முதலிற் பதியிலக்கணங் கூறப்படுகின்றது.

பதி - சொரூபமென்றுந், தடத்தமென்று மிருவகைப்படும். சொரூபமாவது-முதனடு விறுதியில்லாததாய்த், தூலசூக்கும சூநியரூபமில்லாததாய்க், குணங்குறி யில்லாததாய், ஒன்றாய், அசலமாய், அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சோதியாய்ப், பஞ்சகிருத்தியத்திற்கதீதப்பட்டு நின்மலவடிவாய் விளங்குவது.

இனித்தடத்தவிலக்கணமாவது — சிருட்டி, திதி, சங்காரந், திரோபவம், அநுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்களைப் பண்ணுவதாம்.

பதியாகிய சிவத்தை யக்கினிக்குஷ்ணம்போலப் பிரிவற்றிருக்குஞ் சத்தியானது - நித்தமாய், ஒன்றாய், இச்சாஞானக்கிரியா சொரூபமாயிருக்கும். இது காரியபேதத்தினாலே பரைமுதலாகவநேகபேதப்படும்; சத்தியுடைய பேதத்தினாலே சிவனுஞ்சததர் யுத்தியுக்தர், பிரவிருத்தரென மூவகையாய்ப் பேதப்படுவர்.

சத்தரென்பவர் காரியத்தைப் பண்ணவுத்தி யோகியாமற், காரியம் பண்ணத்தொடங்காமலிருக்கிற சத்திமாத்திரமா யிருக்கிறவர் ; இவர் சத்திகலையற்றிருக்கிறவராகையால், நிட்களராயிருப்பர். இவருக்கு ஞானமாத்திரமே திருமேனி; இவருக்கு இலயரென்றுஞ், சத்தரென்றும் பெயர்.

இனியுத்தி யுக்தராவர் காரியம்பண்ணவுத்தியோகிக்கிறசத்தியுடையவர்; காரியம்பண்ண வுத்தியோகிக்கிறபொழுது ஞானக்கிரியா சத்திகளொப்பிலுண்டானவர்; பரையாதியிச்சை ஞானக்கிரியை யென்னும் பஞ்சசத்திகள் சுத்தமாயையிலே பதிந்தபொழுதுண்டாகிய விசாநாதி பஞ்சப்பிரமங்களையே திருமேனியாகவுடையவர் பாசகலைகளுடன்கூடியிருத்தலாற் சகளமுஞ், சத்திகலைகளுடன் கூடியிருத்தலால் நிஷ்களமுமுடைமையாற் சகள நிஷ்களராம்; இவர்க்குச் சதாசிவரென்றும் போகரென்றும் பெயர்.

இனி பிரவிருத்தராவர் காரியங்களைப் பண்ணத்தொடங்கியசத்தியை யுடையவர், காரியம் பண்ணுகிறவேளையிற் கிரியை யதிகமாகவேண்டுமாதலான் ஞானசத்தி கொஞ்சமுங், கிரியாசத்தி யதிகமுமாகவுடையவர்; இவர் பாசகலைகளுடனே கூடியிருக்கையாற் சகளராம்; இவர்க்கு மகேசுரரென்றும் அதிகாரரென்றும் பெயர்.

இந்தப்பதி, சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விட்டுணு, பிரமா என்னு நிட்களம், சகளநிட்களஞ், சகளமாக வொன்பது பேதப்படும்; இவர்களிற் சிவத்திற்குச் சத்தியும் நாதத்திற்கு விந்துவும், இவ்விரண்டுமொழிந்த மூர்த்திகளாவர்க்கு முறையே, மனோன்மனியென்றும், மகேசையென்றும், உமையென்றும், இலக்குமியென்றுஞ், சரசுவதியென்றுஞ் சத்திபேதமெனவகைப்படும்; காரியபேதத்தினலே சத்திசிவங்களும் பேதமாயின வென்க. பதிக்கு இந்தச்சிற் சத்தியே தேகங்கரணமிட மெல்லாமெனவறிக. இப்படிக்கர்த்தவுண்டென்பதற்குப் பிரமாணமாவது :—

ஆண், பெண், அலி முதலான தேகாதி பிரபஞ்சங் காரியமாதலாற் கடாதிகளைப்போலக் கர்த்தவையுடையன.

மாயை சடமாயிருத்தலாலும், ஆன்மாக்கள் தடைப்பட ஞானக்கிரியைவுடைமையாற் சுதந்திரவீனமுடையராயிருத்தலானும், இவ்விரண்டையுந்தொழிற்படுத்துங் கர்த்தாவுண்டென்பது புலப்படும்.

ஆன்மாக்கள் மலத்தையுடைமையினலுங் கர்த்தா நிர்மலரானதாலும் ஆன்மாக்களுக்கு வேறாகியும், எள்ளுக்குள் ளெண்ணெய்போலப்

பிரிவற்றிரண்டற நின்றுங், கன்மத்துக்கீடாகத் தனது *சமவாய சத்தியினாலே சுத்தாசுத்த மாயைகளைச்சேர்த்துத் தனுகாணாதிகளையுண்டாக்குவர்.

இவ்வாறுதலாற் கர்த்தாவானவர் குலாலனைப்போலச் சரீரமுதலானவைகளையுடையவராகவேண்டுமெனில்? அற்றன்று. காலம்போல அருபியாயிருந்து சிருட்டியாதிகளைப் பண்ணுதல்கூடும்; அவர்தேகத்தையுடையவராகில், அவருடைய தேகத்தை யுண்டுபண்ணவேறேயொரு கர்த்தாவேண்டுமென்ற அவத்தை வருமாதலாற்றேகாதிசகலவுபாதியுமற்றவரேகர்த்தாவாம். தேகாதிகளையுடைய †அனந்தேசுரர் முதலானவர்கள் அவாந்தரகர்த்தாக்களாம்.

அவ்வாறன்றிச் சூரியனிர் விகாரியாயிருந்து அவன் சன்னிதானத்திற்றாமரை மொட்டலரவும், ஆம்பல் குவியவுஞ், சேறிறுகவும், வெண்ணெயிளகவும் பண்ணுமாறுபோலக்கர்த்தா காரியத்திலே யுன்முகமாயிருக்கிற சத்தியுடனே கூடியிருப்பவராதலாலவர் சந்நிதிமாத்திரத்திலே சிருட்டியாதிகளைப் பண்ணுவரென்க.

இந்தக்கர்த்தா சத்தராயிருந்து பண்ணுங்கிருத்தியமாவது தீவிரதாசத்திநிபாதத்தையுடையவர்களை யனுக்கிரகித்துப் பரமுத்தியில் விடுவதுந், தீவிரசத்தி நிபாதத்தையுடையவர்களை அபரமுத்திதானத்தில் வைப்பதுமாம்.

இவர் சுத்தமாயையைத்தனது சத்தியாற்கலக்கிச் சத்தரூபமாகிய நாதவிந்துக்களையும், அர்த்தரூபமாகிய நாதவிந்துவென்னும் பெயரையுடைய சிவதத்துவஞ் சத்திதத்துவங்களையும், இந்தத்தத்துவங்களிலே புவனங்களையும் இந்தப்புவனங்களிலேயிருக்கிறவர்களுக்குத் தனுகாணாதிகளையும், விந்து தத்துவத்திலே நின்றுஞ் சதாசிவத்துவத்தையுமுண்டாக்கி, அந்தச்சதாசிவ தத்துவத்துக்குச் சதாசிவரை நாயராகப் பண்ணி, யவரை வேறறக்கூடி நின்று சிருட்டியாதிகளைப் பண்ணுவரென்க.

---

* சமவாயம்—விட்டுப்பிரியாமை.

† மகேசுரரென்றும் பாடம்.

இனியுக்தியுக்தாராகிய சதாசிவராயிருந்து பண்ணுங் கிருத்தியமாவது:—சதாகாலமு மநுக்கிரகித்து மிருந்திருக்கிற விஞ்ஞானகலரிலே தீவிர தாசத்தி நிபாதமுடையவர்களை யநுக்கிரகித்துப் பரமுத்தியில் விடுவதுந், தீவிரசத்தி நிபாதமுடையவர்களை யநுக்கிரத்து மலபரிபாகத்துக்கீடாகச் சிவதத்துவ முதலான பஞ்ச தத்துவங்களிலும், ஞானக்கிரியைகளை விளக்கிய பரமுத்தராகவுஞ், சிவசமனாகவும், அணுசதாசிவர்களாகவும், வித்தியேசுரர்களாகவு, முருத்திரர்களாகவும்வைப்பதும், நாதரூபமாகிய அந்தப்பரஞானத்தை யீசாநாதியைந்து முகங்களால் வேதங்களாகவும் பிரணவர் முதலியோர்க்குக் காமிகாதியாகமங்களாகவும் பிரித்து அநுக்கிரகிப்பதுஞ், சாதாக்கிய தத்துவத்திலே நின்று ஈசுவர தத்துவத்தையும் அதிலே புவனங்களையும் அந்தப்புவனநாயகரான அனந்தர் முதலான அட்டவித்தியேசுரர்களுக்குத்தநுகரணாதிகளையுண்டாக்குவதும், இந்தஈசுவரதத்துவத்துக்கு நாயகராக மகேசுரரைப்பண்ணுவதும்,இந்தத்தத்துவத்திலே நின்றுஞ் சுத்தவித்தியாதத்துவத்தையுண்டாக்குவதுஞ், சுத்தவித்தையிலேயிருக்குஞ் சத்தகோடி மகாமந்திரர்களுக்குத் தநுகரணாதிகளையுண்டாக்குவதுமாம்.

இனிப்பிரவிருத்தராகவிருந்துபண்ணுங்கிருத்தியமாவது:— பிரளயாகலரிலே தீவிரதரசத்திநிபாதத்தை யுடையவர்களை அநுக்கிரகித்துப் பரமுத்தியடையப் பண்ணுவதுந், தீவிரசத்திநிபாதமுடையவர்களைச் சகல கன்மங்களையும் போக்கி யதிகாரமலமாத்திரமாகநிறுத்தி யுருத்திராகப்புவனேசுரர்களாகப் பண்ணுவதும், அசுத்தமாயையைக் கலக்கி மாயை காலம் நியதி கலையென்னுந் தத்துவங்களை யுண்டாக்குவதும், இவைகளிலே புவனங்களையுண்டாக்குவதும், இந்த நான்கு தத்துவங்களிலே யிருக்கிறவர்களுக்குத் தநுகரணாதிகளையுண்டாக்குவதும், ஸ்ரீகண்டபரமேசுரனை யதிட்டித்து நின்று கலையிலே பிரகிருதியையும் வித்தையையு,மிராகத்தையுண்டாக்குவதுங், காலாதிகளின் கூட்டத்திலே புருட தத்துவத்தையுண்டாக்குவதும், பிரகிருதியைக் கலக்கிக் குணங்களைப் பிரிப்பதுந், தம்முடைய வலப்பாக மிடப்பாக மார்பென்ற வங்கங்களிலே யுண்டான பிரமவிட்டுணு நீலருத்திரரென்னு மும்மூர்த்திகளை

யும் ஸ்ரீ கண்ட பரமேசுரனால் நாளடைவிலே இராசத சாத்துவிக தாமதங்களாற் சிருட்டிப்பித்துக்குணமுதலாகப் பிருதிவியீறான விருபத்துநான்கு தத்துவங்களிற் சிருட்டிதிதி சங்காரம் பண்ணுவதுமாம்.

இனிக்கர்த்தாவானவர் சுத்தாத்துவாவுக்குச் சத்தரும் யுத்தியுக்தரும், அசுத்தாத்துவாவுக்கு அநந்தேசுரராகிய பிரவிருத்தருமாக வருவாரென வறிக.

பதியிலக்கண முற்றிற்று.

## பசுவிலக்கணம்.

ஆன்மா வில்லையென்றுசிலர்சொல்லுகின்றமையாலதையுண்டென்று நிரூபிக்கப்படுகின்றது.

அஃதாவது சூநியமென்பதின்றி; என்னுடைய தேகமென்றுசொல்லுவதுமின்றி, இந்திரியங்களொழிந்திருக்கிறசொப்பனவத்தையினாலு மறிகையா லிந்திரியங்களு மல்லவாய்ச், சுழுத்தி துரியந் துரியாதீதங்களிலே யந்தக் கரணங்களும் பிராணவாயு மற்றிருக் கையாலந்தக்கரணங்களுக்கும் பிராணவாயுவுக்குமந்நியமாய், விளித்தபோதுமுன்பண்ணின காரியக்குறைகளைப்பண்ணவும் அறியவுஞ் செய்கையாற்கணிகனுமல்லாமற், றேகத்திற்கப்புறத்திலேயிருக்கின்ற பதார்த்தத்தைக் கிரகிக்கையாலணுபரிமாணனு மத்தியபரிமாணனுமல்லாமற், றானே யொன்றையு மறியமாட்டாமலிருக்கையாற் சுதந்திரனுமல்லாமற், சுகதுக்கங்களாற் பலவகைப்பட்டிருக்கையா லொருவனுமல்லாமற், சுகதுக்க பலத்தைப் புசிக்கையாற் கர்த்தாவுமல்லாமல், நித்தியனாய் வியாபகனாய் அசுதந்தரனாய் அநேகனுமா யகர்த்தாவாய் மலத்தினாலே தடைபட்ட ஞானசொருபியா யிருக்கிறவனெனவறிக.

இந்த வான்மா அந்தக்கரணங்களுக் கந்நியனாயிருந்தாலும் இராசாவும் மந்திரியுங் கூடியிருக்குமாறுபோல அந்தக்கரணங்களுடன்விடயபோக நிமித்தங் கூடிக்கொண்டிருப்பன் ; மலத்தாற் றடைபட்ட ஞான

சொரூபியாகையால் ஐந்தவத்தையைப் பொருந்தியிருப்பன்; இவ்வாறொரு ஆன்மாவுண்டெனபதற்குப் பிரமாணம் தொழிலைப் பொருந்தியிருக்குந் தேகாதிகள் சடமாகையாற் கடாதிகளைப்போலத்தானே சேட்டிக்கமாட்டா ; இவற்றைச்சேடிக்கிறவனெவனோ வவனேயான்மாவென்பதாம்.

இனி யான்மாக்களுக்குக் கேவலஞ், சகலஞ், சுத்தமென ஆணவமாயை சிவசத்தியான் மூன்றவத்தைவரும்.

இவற்றுட் கேவலாவத்தையாவது:—தேகாதிகளொன்றுமற்றுக், குணமற்றுத், தொழிலற்றுப், போகமற்றுக், கர்த்தாவாகையற்று, மைக்குண்மணிபோல ஆணவமலத்தினாலே மூடப்பட்டு ஓரறிவுமற்று, வியாபியாயிருக்குமவதாரமெனவறிக.

சகலாவத்தையாவது:—பஞ்சகோசபெத்தனாய், அதனாலே பரிச்சின்னனாகிக், கிஞ்சிக்கனாய் அநாதிகன்மத்துக்கீடாய், அநேக யோனிகளிலுஞ் சஞ்சரித்து விடயங்களைப் புசிக்குமவதாரமெனவறிக.

சுத்தாவத்தையாவது— இருவினையொப்பு மலபரிபாகமுஞ்சத்திநிபாதமும் வந்தகாலத்துச், சரியை கிரியை யோகஞான பாதங்களையுணர்ந்த குருகடாக்ஷத்தினாலே மும்மலங்களையு நீங்கிச் சச்சிதானந்த சிவமாக விளங்குமவதாரமெனவறிக.

இனியிந்தவான்மாக்கள் அதமரான சகலர், மத்திமரான பிரளயாகலர், உத்தமரான விஞ்ஞானகலரென மூவகைப்படுவார்கள். இவருட் சகலராவார் ஞானக்கிரியையைத் தடுக்குமாணவ மலத்தையும், அது சிறிது நீங்குதனிமித்தமாக மாயாகாரியமாகிய கலாதிகளையும், போகத்தின்பொருட்டுக் கன்மமுமாகிய மும்மலத்தையுமுடையவராக விருப்பார்கள்.

பிரளயாகலராவார்:-ஞானக்கிரியைகளைத் தடுக்குமாணவமலத்தையுடையவர்களாய்க், கன்மபரிபாகத்தினாலே காலாதிகளைத் தங்கள் வசம் பண்ணிக்கொண்டு ஈசுராத்துவாவிற் போகத்திற்கேதுவானகன்மத்தையுமுடையவர்களாய் இவ்வாறணவகன்மமென்றிருமலபந்தாயிருக்கிறவர்கள்.

விஞ்ஞானகலராவார் ஆணவமலத்திலே தடைபட்ட ஞானக்கிரியை யுடையவர்களாதலாலில்லை யென்பதற்கொத்த ஞானக்கிரியையுடையவர் களா யொரு மலத்தராயிருக்கிறவர்கள்.

இந்த மூவகையான்மாக்களும் மாயையினுடைய வடிவென்னுமான் மதத்துவமிருபத்து நான்கினும், நடுவென்னும் வித்தியாதத்துவமே ழினு, முடிவினுமிருப்பார்கள். விஞ்ஞானகேவலரநுக்கிரகம் பெற்றதற் குப் பின் சிவதத்துவங்களிலே யிருப்பார்களெனவறிக.

---

## இனிப்பாசவிலக்கணம்.

---

பாசம் ஆணவந், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை, கன் மமென வைந்தாம்.

இவற்றுள், ஆணவமலமாவது:— நித்தியமா, யொன்றாய், விபுவா, யநாதியா, யான்மாக்கடோறுஞானத்தைத் தடுக்குமெண்ணிறந்த சத்தி களையுடையதாய்ச் செம்புக்குக் களிம்புபோலச் சகசமாயிருக்கும்; இதற் குப் பரியாய நாமமாவன :— பசுநீகாரம், பசுத்துவம், மலம், அஞ்சனம், அவித்தை, ஆவிருதம், மூலமலம், மிருத்தியு, தமசு, சென்மபீசம், ஆவரணம், அசுத்தி, மோகஞ், சகசமலம் எனப்பலவாம்.

இவ்வாறாகிய ஆணவமலமுண்டென்பதற்குப் பிரமாணம் ஆன்மா வொன்றினாலே யாவரிக்கப்பட்ட சர்வஞ்ஞனாகவேண்டும்,

அற்பவறிவனாகக் காண்கையால் அற்பவறிவில்லாதவன் மலரகித னுமல்ல, சிவனைப்போலவான்மாவுக் கற்பவறிவியல்பல்ல, எல்லாருக்கு மொருபடித்தன்றாய் ஞானமிருக்கையாலு, மோக்ஷத்திலேசர்வஞ்ஞனாகக் கேட்கப்படுகையாலும், இவையன்றியும்; அருசியாய்த் துக்கமயமாயி ருக்கிற விடயபோகங்களிலே யாசை வருவதும் ஆணவமலத்தினாலே யென்பது பிரமாணமாம்.

இனித்திரோதாயியாவது:— ஆணவஞ்சடமாகையாலிந்த வாணவ சத்திகளைச் சேடிப்பது, ஞானசொரூபியாகிய வாதிசத்தியேயாம்; இந்த

வாதிசத்தியானது பாசகன் மத்துக்குப்பின் சொல்லுகையாலிதையும் பாசமென்று பசாரமாகச் சொல்லப்படும்.

இனிச் சுத்தமாயையாவது:—நித்தியமா, யொன்றாய்ச், சடத்துவா வையும் வியாபித்திருப்பதாய்ச், சடமாய்ச், சுத்தமாய்ச், சூக்குமை முதலிய நான்கு வாக்குக்களுக்குஞ் சடத்துவாக்களுள்ளேமந்திரம் பதம் வன்னங் கலை யென்னு நான்குக்குஞ்சிவதத்துவமுதலிய சுத்த தத்துவங்களைந்துக்கும் அவைகளிலுள்ள புவனங்களுக்கும் அந்தப்புவனங்களிலுள்ள விஞ்ஞானகலருக்கும் அந்தப்புவனநாயகராகிய மந்திரமகேசுரர் மந்திரங்களென்னும் அணுசதாசிவராதியோர் தனுவாதிகட்கு முதற்காரணமாய்ச், சிவனுக்குவைப்புச்சத்தியென்று சொல்லப்படும் பரிக்கிரகசத்தியாயிருப்பது; இதற்குக்குண்டலி, குடிலை, மகாமாயை, ஊர்த்துவமாயை, விந்துவென விவைபோலப் பரியாபநாமங்களுமுண்டு; இஃதுண்டெண்பதற்குப் பிராமாணம் இங்ஙனங் கூறிய காரியங்கள் காரணமன்றி யுண்டாகாவென்பதாம்.

இனி ஊர்த்துவபாகமாகிய சுத்த மாயையினுடைய அதோபாகமாகிய அசுத்தமாயையாவது:—நித்தமாய், ஒன்றாய்த், தன்னுடையகாரியங்களைக் காரணமின்றி வியாபித்திருப்பதாய், வஸ்துரூபமாய்க், கன்மத்துக் கிருப்பிடமா, யசுத்தமாய்ச், சகலர் பிரளயாகலர் என்னுமான்மாக்களுக்குப் பொதுவாய்ப், பிரளயகாலத்திலே தேகாதிகளற்றிருக்கிறவான்மாக்ளுக்குச் சிருட்டி காலத்திலே காலாதி தத்துவங்கள் தூல சூக்கும முதலானவைகளுண்டாவதற்குப் பிறப்பிடமாய்ச், சிவனுக்கு போகசத்தியாகிய பரிக்கிரகசத்தியாகியிருப்பது. இதற்கு அதோமாயை, மோகினி முதலான வநேக பரியாய நாமங்களுண்டு. இவ்வாறோரசுத்தமாயை யுண்டென்பதற்குப் பிரமாணம் இந்தக்கலாதிகாரியங்கள் மாயையாகிய வுபதானமின்றியுண்டாகா; மண்ணுண்மையின்றிக் கடமுண்டாகாதது போல வென்க. கன்மஞ்சடமாகையாலான்மாவினிடத்திலிராது; இருக்கில், ஆன்மாச்சடமாகத்திரியும்; சுத்தமாயை கன்மத்துக்கு மேற்பட்டிருப்பதாற் சுத்தமாயையிலுமிராது; ஆகவே சங்காரகாலத்திலே இதிலிருக்கவேண்டுமென்பதறிக.

இனிக் கன்மமலமாவது:— மனோவாக்குக் காயங்களாற் பண்ணப் படுகையாற் கன்மமென்றும், பண்ணின கன்மம் நசித்துப்பலமுண்டாகு மட்டும் புவனத்திலும், மருத்தெண்ணெ வாசனைபோலப்புத்தியிலுந்தங் கிக் கண்ணுக்குக் காணப்படாதிருக்கையால் அதிட்டமென்றுந், தேகாதி களைப் பலவகையாயுண்டாக்குகையாற் சனகமென்றும், எல்லாவற்றையுந் தரிக்கையாற்றூரகமென்றும், புசிக்கப்படுகையாற் போக்கியமென்றுஞ் சொல்லப்படுவதாய், ஆத்தியான்மீக முதலிய துக்கத்திரயத்திற்குக் காரணமாய், ஆன்மஞானமுமாயாகாரியங்களுங் கூடின விடத்திலே யுண் டாகுகையாற் றன்மாதன்மசொரூபமாய்ப், பிரளயகாலத்திலே பக்குவப் படுவதாய்ச், சிருட்டிகாலத்திலே தேகாதிகளுக் கேதுவாவதாய்ச், சங்கார காலத்திலே மாயையிலே யிருப்பதாய்ப் புசித்தாலொழியத் தொலையாம லிருப்பது; இது காயிகம், வாசிகம், மானசமென மூவகைப்படும்.

இவற்றுட்காயிகமாவது:— தெய்வங்களைப் பூசித்தல், ஒருவனை யடித்தன் முதறிய புண்ணிய பாவங்களாம்.

வாசிகமாவது:—வேதாகம ஞானசாத்திர புராணவடங்கன்முறை முதலிய திருமுறைகளை யோதுதல், ஓதுவித்தல், பொருளைக்கேட்பித் தல், வேதாகம மந்திரங்களை வாக்கு, மந்தம், மானதமாகச்செபித்தல், ஒருவனை வைதன்முதலிய புண்ணியபாவங்களாம்.

மானசமாவது:—மூக்கூற்றறுவகைச் சமயத்திற்கதீதப்பட்டவகச் சமயமாறினுட் சைவர்கள் பண்ணும் அதோபாகமாகிய தியான நீக்கிச் சைவசித்தாந்திகள் ஐந்தெழுத்துந், திருநீறுங், கண்டிகையும் பொரு ளாகக்கொண்டு, பாசிவத்தின் றடத்தலக்கண சொரூபலக்கணங்களையறி ந்து தியானித்தன் முதலிய தியானமும், பிறருடைமையை யபகரிக்கச் சிந்தித்தன் முதலியனவுமாகிய புண்ணிய பாவங்களாம்.

இந்தக்கன்மஞ்சாதியாயுப் போகங்களைக்கலந்து அகந்தைபண்ணி நிற்கும்; அஃதெழிந்து ஒருவர்க்காயினுந் தீர்க்காயுவும் நல்லசாதியு நல்லபோகமும் பண்ணாது; புண்ணியத்தினாலே பாவமும் பாவத்தினாலே புண்ணியமு மழியாது.

ஆகம புராணவிதிப்படி பிராயச்சித்தம் பண்ணினாற் புசிப்பியாமற் போகும்; அவ்வண்ணம் பரிகாரஞ்செய்யாவிடில் ஆன்மாப்பாவகன்மங்க ளுக்கு ரௌரவங் கும்பிபாக முதலிய துக்கக்கிலேசங்களையநுபவித்துப்

பாடாணம்போற் கிடக்குமன்றிப் புசித்தாலொழியத்தொலையாது ; புசிக்குமிடத்து இதாகிதங்களான் மேலைக்குக்கட்டுப்பட்டிருப்பதும், மனோவாக்குக் காயங்களாலுண்டாகையா லுற்பத்தியையும், புசித்துத் தொலையப்படுகையாலே நாசத்தையுமுடையதாம் ; இதுதொன்றுதொட்டு வருகையாலாற்றொழுக்குப்போலப் பிரவாக நாதியாம் ; இந்தத் தன்மாதன்ம சொரூபமான கன்மத்துக்கு மூலகாரண கன்மமானது ஆணவமாயைகளைப்போல் நித்தியமாய்ச் சகசமாயிருக்கும் ;

இப்படி யொருகன்ம முண்டென்பதற்குப் பிரமாணமாவது:— இருவர் ஒத்த நிலத்திலே திருவள்ளுவர் குறளின்படி உழவு முதலியன சரியாகச்செய்து பயிரிட்டிருக்க ஒருவனுக்கு விளைகின்றது மற்றொருவனுக்கு விளையாமற்போகின்றது ; இதற்குக்காரணமியாது ? "பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்" என்றபடி, புண்ணியபாவவன்மை மென்மையெனக் கூறநிற்குங் கன்மமாம் ; அன்றியும், ஒருவன் சுவர்க்கத்திலே சுகமனுபவிக்கின்றான் ; மற்றொருவன் நரகத்திலே துக்கமனுபவிக்கின்றான் ; இதற்குக் காரணமியாது ? அதுவேகன்மமாவெனவறிக.

இனிச்சிருட்டி வரலாறுவது:—சுத்தமாயையிலேநின்று சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென நான்கு வாக்குகளும், சிவஞ், சத்தி, சதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தையென்னுஞ் சுத்த தத்துவங்கள் ஐந்துமுண்டாம்.

அசுத்தமாயையிலே நின்று, மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என ஏழு தத்துவங்களுண்டாம்.

பிரகிருதி மாயையிலே சித்தம், புத்தி, அகங்காரம், மனம், சோத்திரம், தொக்கு சட்சு, சிங்குவை, ஆக்கிராணம், வாக்கு, பாதம். பாணி, பாயு, உபஸ்தம், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவியென்னு மிருபத்தினொன்கு தத்துவங்களுண்டாம்.

இனிச், சுத்தமாயையிலே வாக்குகள் தோன்றுமாறு:—சத்தருடையசத்தி சுத்தமாயைக் கலக்கிக் காரியவுன்முகமாய்க் கூடிநின்றபொழுது சந்திரகிரணங் கூடும்போது சமுத்திரமுப்பி யொலியுண்டாவதுபோல ஒருநாதமுண்டாம் ; அந்தநாதம் பாசரீரத்தினுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குவதா யெல்லா அர்த்தத்தையுஞ் சாமானியமாய் விளக்குவ

தாய் மூவகை யான்மாக்களுக்கும் ஞானப்பிரகாசத்திற் கேதுவாய், சூக்குமையென்றும் பேர்பெற்றிருக்கும்; அது தானே விருத்தியாய்ப் பஞ்சவர்னங்களையுஞ் சூக்குமரூபமா யொடுக்கின்ற மயின்முட்டைக்குள்ளிருக்கிற நீர்போலப்பிரிக்கப்படாத வர்னங்களை யுடைத்தா யுன்முகமாயர்த்தவிசேடத்தைப் போதிக்கப்படாமற் சிந்தையிலிருக்கிற சத்தம் பைசந்தியாம்.

அது தானே விருத்தியாய், விந்துவிலதோ பாகத்திலுண்டாகிய அம்பிகை, வாமை, சேட்டை, ரௌத்திரியென்னும், நான்குசத்திகளினுலும் ஜயை, விஜயை, அசிதை, பராசிதை, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதையென்னும் பதினறுசத்திகளிலுமுண்டாகிய புத்தியிலிருக்கும் அகாரமுதலிய ஐம்பத்தோரக்கரங்களையும் அவற்றினடைவையுமுடைத்தாய்ச்செவிக்குக்கேட்கப்படாததாய், உள்ளேயுணரப்படுவதாய், உதானவாயுவின் ருெழிற்பாடுபற்றியிருப்பதாய்க் கண்டத்திலடங்கியிருக்குஞ் சத்தம் மத்திமையாம்.

பிராணவாயு வியாபாரமாய், மேலே யெழுந்து தன்செவிக்கும்பிறர் செவிக்குங் கேட்க யோக்கியமா யர்த்தத்தைச் சொல்லுவதாயிருக்கிற சத்தம் வைகரியாம்.

இந்த நான்கு வாக்குகளும் நிவர்த்தி முதலிய பஞ்சகலைகளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்சதத்துவங்களிலுமிருக்கும்; மூவகை யான்மாக்களிடத்திலும் பந்தித்திருக்கும்; இந்த வாக்குகள் தனக்கந்நியமாக ஒருவன் சிவஞானத்தாற் கண்டகாலத்திலே ஆணவமலத்துடனே நீங்குமல்லது ஒருவருக்கும் நீங்காது; இந்தவாக்குகளை ஞானவான் யாவன் அந்நியமாகக்காண்கின்ருன் அவன் நித்தியனுகி நினைப்பு மறப்புமற்றவனுகி விகாரமில்லாதவனுய்ச் சுதந்திரனுகி ஞானனந்த சொரூபியாவன்; எவ்வாறெனில், சூரியவுதையத்திலே நட்சத்திரப் பிரகாசமும் அந்தகாரமும்போலச் சிவஞானப்பிரகாசத்திலே அஞ்ஞானமாகியவாணவமலத்துடனே இந்தவாக்கு ரூபமாகிய விஞ்ஞானமும் போம். இது சுத்தமாயையிற் சத்தமுண்டாமாறு சொல்லப்பட்டது.

சுத்தமாயையிற் றத்துவங்களாகிய அர்த்தவடிவென்றும், ஒலிவடிவென்று மிருவிதமுடையவத்துவாக்களி லர்த்தவடிவாகிய சிவஞ் சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை யென்னுமைந்திற் சிவதத்துவமாவது:—சுத்தமாயையினுடைய முந்தினவிகாரமென வறிக. இதிலே சூக்குமையென்னும் வாக்கு மிருத்துக் காமிகாதி சொரூபமாயிருக்கிற சிவாகமவழி முத்தியையிச்சிக்கிறவரிடத்திற் சிவஞானவிளக்கமதிகம், அதிலுஞ்சிறிததிகம், மிகவுமதிகம் என்பதை விளக்கும்; இன்னும் அவ்வாக்கு ஈசுரசக்திக்கு ஏவல் செய்துகொண்டிருக்கும்; இன்னுமச் சிவதத்துவம், மலத்தைப்போக்குஞ் சக்திக்குஞ் சிவபதத்தையடைவிக்குஞ் சக்திக்கு முபாதியாயிருக்கிற, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமினியென்னுங் கலைகளுக்கு மிருப்பிடமுமாய், நாதமென்று சொல்லப்படுவதாய்த் தன்மரூபமாயிருப்பதெனவறிக.

இனிச் சத்திதத்துவமாவது காமிகாதி அபரஞானத்தையுடைய பைசந்தி வாக்குவிருத்திக்குக் காரணமாய்; ஆன்மாவுக்குச் சமுசாரநிவிர்த்திக்குப் பகையாயிருக்கிறதிலே பிரவர்த்திக்கை, இதிலே விஷயகோசரமாயிருக்கிற பசுஞானத்தை விடுத்துச் சிவஞானத்தைச்சாட்சாத்காரமாய்ப் பிரகாசிப்பிக்கிறதற்குத் தாபத்திரய முதலான சர்வதுக்கங்களையும் போக்குகை ஆகிய இவற்றைப் பண்ணிகையால் நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதையென்னுஞ் சத்திகளுக்கிருப்பிடமாய், விந்துவென்று சொல்லப்படுவதாயிருக்கிற சிவதத்துவ காரியமாம்.

இனிச் சாதாக்கிய தத்துவமாவது:—காமிகமுதலான வபரஞானத்தையுடைய மத்திமையென்னும் வாக்கு விருத்திக்கிருப்பிடமாய்க், காமிகமுதலான தந்திரங்கள் வேறாகிறதற்குக் காரணங்களாயிருக்கிற பிரணவாதிகட்குஞ் சாமீப்பிய முதலானவற்றை யடைந்தோர்க்குந் தநுகரணாதிக்குக் காரணமாகிய சத்திதத்துவ காரியமாம்.

இனி ஈசுர தத்துவமாவது:—அநந்தேசுராதிகட்கு மவர்களையுபாசிக்கையா லவர்களுடைய பதத்தை யடைந்திருக்கிறவர்கட்குந் தநுகாணபுவநாதியை யுண்டாக்குவதான சதாசிவதத்துவ காரியமாம்.

இனிச், சுத்தவித்தியா தத்துவமானது:— காமிக முதலானவாகமங்களுடைய வைகரி வாக்குவிருத்திக் கிருப்பிடமாய்ச், சத்தகோடி மகாமந்திரங்களுக்கும், கணேசுரர்களுக்கும், இந்திரன் முதலான திக்

குப்பாலகர்களுக்கும், தனுகரணபுவன முதலானவற்றிற்குக் காரணமாய்; ஈசுவரதத்துவ காரியமாயிருப்பதாம்.

சிலபெயர் வருமாறு:—

பரமான்மா ஞானமாத்திரத்துடன் கூடியிருக்கிறபொழுது, அவர்க்குச் சிவமென்று பெயர். அவரிருக்குந் தத்துவத்திற்குஞ் சிவமென்றுபெயர். தொழின்மாத்திரத்துடன் கூடியிருக்கிறபொழுது அவருக்குச் சத்தியென்று பெயர். அவரிருக்குந் தத்துவத்திற்குஞ் சத்தியென்று பெயர். ஞானக்கிரியைகள் சரியாயிருக்கக்கூடியிருக்கிறபொழுது அவர்க்குச் சதாசிவமென்று பெயர். அவரிருக்குந்தத்துவத்திற்குஞ் சதாசிவமென்றுபெயர். கிரியையதிகமாய்ஞானங்குறைந்திருக்கக் கூடியிருக்கிற வப்பொழுதவர்க்கு ஈசுரரென்றுபெயர். அவரிருக்குந் தத்துவத்திற்கும் ஈஸ்வரவென்று பெயர். ஈஸ்வரரெனினும் மஹேஸ்வரரெனினு மொக்கும். ஞானமதிகமாய்க்கிரியை குறைந்திருக்கக்கூடியிருக்கின்றவப்பொழுது அவர்க்குச் சுத்தவித்தையென்று யெர். அவரிருக்குந் தத்துவத்திற்குஞ் சுத்தவித்தையென்று பெயர். அப்பரமான்மாவுக்கு இவ்வைவகைத்தத்துவமுஞ் சுதந்திரவடிவமாம்.

மாயா தத்துவமாவது:—ஆன்மாவுக்கு மயக்கவறிவைப் பண்ணுவது.

கலையாவது:—நியதியின்பின் மாயையினின்றுந் தோன்றுவதாய் ஆணவத்தை யேகதேசத்திலே நீக்கி ஆன்மாவின் கிரியாசத்தியை விளக்குவதாய் மாயாகாரியமாயிருப்பது. இதுவுண்டென்பதற்குப்பிரமாணம்; இதுவே ஞானக்கிரியைகளை விளக்கும் பின்னையொன்றினாலே யவ்விளக்கம் வாராதென்பது.

வித்தையாவது:— கலையிலேயுண்டானதாய் ஆன்மாவுக்கு ஞானசத்தியை விளக்குவதாய்ப் போகத்தைக் கிரகிக்கிறதற்குக் காரணமாயிருப்பது.

இராகமாவது:—வித்தையிலே யுண்டானதாய் ஆன்மாவினிச்சாசத்தியை விளக்குவதாய்ப், புத்திதருமமான அந்தந்தவிஷயங்களிலாசையை யுண்டாக்குவது.

காலமாவது:—மாயையினின்றுந்தோன்றி, இலவந்துடி யென்பது முதலியவற்றிற்குக் காரணமாய், இம்மட்டென்று போகத்தையளவிடுவதாய், எல்லை, பலம், புதுமைகளைப் பண்ணுவதாய்ச் செல்கால நிகழ்காலமெதிர்கால முதலாக வநேக பேதப்பட்டிருப்பது.

நியதியாவது:—காலத்தின் பின் மாயையினின்றுந் தோன்றி ஒருவன்செய்தகன்மபலத்தை விஷயநன்றாயிருக்கிறதென்று புசியாமலுந் தான்செய்த கன்மபலத்தை விஷயநன்றாயிருக்கவில்லையென்று புசியாமலிராதபடியயும், ஒருவர் தேகாதிகண் மற்றொருவருக்குப்போகவேதுவாகாதபடியும், அவரவர்செய்த கன்ம மவரவரே நுகரும்படி இராசாக்கினைபோல, நிச்சயம்பண்ணி நிறுத்துவது.

புருடதத்துவமாவது:—இங்ஙனங் கூறிய கலைமுதலான பஞ்சதத்துவங்களையும் பொருந்திய பஞ்சகஞ்சுகமுடைய வுயிரே முற்கூறிய இச்சா ஞானக்கிரியை மருவிப் புருடதத்துவமெனப் பெயர்பெற்று போகத்துன்முகமாய் நிற்பது.

இனிப் பிரகிருதியாவது:—கலையிலே நின்றும் ஸ்ரீகண்டபரமேசுரனுலுண்டாக்கப்பட்டதாய்க், குணமுதலான விருபத்துநான்கு தத்துவங்களுக்குக் காரணமாய்ப், பிரிக்கப்படாமற் குணங்களைச் சரியாகக் கூட்டி யிருப்பதாய், விபரீதவுணர்வையுடையதாகிய அவிச்சையைத் தோற்றுவிப்பது ; இதற்கு மூலப்பிரகிருதியென்றும் பெயர் கூறப்படும்.

இனிக், குணதத்துவமாவது:—பிரிக்கப்பட்ட குணங்கள் சரியாய்க் கூடியிருக்கு மவதாம் ஆகையாற் பிரகிருதிக்குங் குணதத்துவத்திற்கும் பேதமில்லை ; இக்குணதத்துவஞ் சாத்துவிகம், ராசதந்தாமதமுதலிய மூன்றாய் ஒவ்வொன்று முத்திறப்பட்டு ஒன்பதுவகையாயிருக்கும்.

* சித்தமாவது:—பிரகிருதியினதோர் பாகமே ; அதுபோகத்திலே சாமானியமாயிருக்கச் சிந்திக்கப்பண்ணும் ; குணஞ், சித்தம், பிரகிருதியென்ற மூன்றுமவதர நாமங்களாம்.

---

* இச்சித்தமானது மனத்தின் பின்னதா யதன்கண டங்குமெனச் சித்தியார் சுபக்க மிரண்டாஞ்சூத்திரம் ருஅ-ஆங் கவியுரையிற் கூறினர்.

இனிப்புத்தியாவது:—குணதத்துவத்திலே நின்று முண்டானதாய், உயிர்கள்செய்த புண்ணியபாவங்கள் தன்பாற் சாரப்பட்டும், இருவினைக்கீடாகவந்த விடயத்தை யஃதின்னதென நிச்சயித்தும் நிற்பது; இது தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம், என்னுமெட்டினுக்குங் காரணமாயிருப்பது.

இனி, அகங்காரமாவது:—என்னேடொப்பவர் ஒருவருமில்லையென அகந்தைக்குக் காரணமாய், யான் எனதென்னு மபிமானத்துக்குக் காரணமாய்ப், புத்தியிலே யுண்டானதாயிருப்பது; இது சாத்துவிக முதலிய குணங்களுடைய பிருதியினாலே தைசதம், வைகாரிகம், பூதாதிகமென மூன்றுபேதப்படும்; இவைகள் மன முதலியவற்றிற்குக் காரணமாயிருக்கும்.

மனமாவது:—தைசதவகங்காரத்திலுண்டானதாய், விகற்பமென்னுஞ் சந்தேக நினைவுஞ், சங்கற்பமென்னு நினைவும், இந்திரியங்கள் வழியாய்வந்த பொருள்களைப்பற்றி யறியுமறிவுமுடையதாயிருப்பது இந்த விசேடணத்துடனே கூடினது விசேடியமென்ன விஷயீகரித்து வரும் நிச்சயத்தையும் பண்ணுவது; இது தான் சுரோத்திராதி யிந்திரியங்களிலே கூடின வடைவிலே சத்தாதிஞானங்களையுண்டாக்கும்; ஆகையால், விபுவுமல்ல, பஞ்சாவதானியிடத்திலே யொருங்கே ஞானம் வருகையால் அணுவுமல்ல; விரிதல் குவிதலையுடைய மகத்துவமாம்.

இனிச், சுரோத்திராதியாவன:—முற்கூறியதைசத வகங்காரத்திலே நின்றுஞ் சுரோத்திராதி யிந்திரியங்களுண்டாம்; தன்னைவந்தடைந்த சத்தத்தைக் காது வெளியிலாகாசமிடமாயிருந்து கிரகிக்குந்தத்துவஞ் சுரோத்திரம்.

தன்னை வந்தடைந்த பரிசத்தைத் துவக்கில் வாயுவினிடமாகவிருந்து கிரகிக்குந் தத்துவம், துவக்கு.

கோளகையிலே யக்கினியினிடமாக வந்தநயனவொளி வழியாகப் போய் ரூபத்தைக்கிரகிக்குந் தத்துவம் சட்சு.

நாக்கிலே அப்புவினிடமாக வந்தடைந்த ரசத்தைக்கிரகிக்குந் தத்துவம் சிங்குவை.

மூக்கிலேயிருந்து பிருதிவியினிடமாக வந்தடைந்த கந்தத்தைக் கிரிக்குந் தத்துவம் ஆக்கிராணம்.

காது முதலான தானங்களிருக்கவுஞ் செவிடர் முதலோர்களுக்குச் சத்தாதிகளறியப்படா திருக்கையா லந்தத் தானங்களிலிந்திரியமில்லை யென்க.

இவற்றிற்கந்நியமாய், வைகரி யகங்காரத்திலே வாக்கு முதலான கன்மேந்திரியங்களுண்டாம்.

இவற்றில், நாக்கினிடமாக நின்று சொற்களை வசனிக்குந் தத்துவம் வாக்கு; கால்களிடமாக நின்று நடத்தல் ஓடன் முதலியவற்றைச் செய்விக்குந்தத்துவம் பாதம்; கைகளினிடமாக நின்று ஈதலேற்றன் முதலிய தொழில்களைச் செய்யுந் தத்துவம் பாணி; குதத்திலே நின்று மலசலவிசர்க்கங்களைப் பண்ணுந் தத்துவம் பாயு; குய்யத்திலே நின்று ஆனந்தத்தைப்பண்ணுந் தத்துவம் உபஸ்தம்.

இனிப்பூதாதி யாங்காரத்திலே நின்று பஞ்சதன் மாத்திரையுண்டாம்; அர்த்தந்தரும் விசேடமின்றியிருக்குஞ் சாமானிய சத்தம் சத்த தன்மாத்திரை; குளிர்ச்சி யுஷ்ணமுதலான விசேடணமற்றுச் சாமானிய சத்தமாய்ச்சத்த பரிசமுமாயிருப்பது பரிசதன் மாத்திரை; வெண்மை, கருமை, செம்மை முதலிய விசேடங்களற்று ரூபசாமானியமாய்ச் சத்த பரிசரூபமாயிருப்பது ரூபதன்மாத்திரை; மதுரமுதலான விசேடமற்று ரசசாமானியமாய்ச் சத்தபரிசரூபரசமாயிருப்பது ரசதன் மாத்திரை; நற்கந்தந் துர்க்கந்தமாகிய விசேடமற்றுக் கந்தசாமானியமாய்ச் சத்த பரிச ரூப ரசகந்தமாயிருப்பது கந்ததன் மாத்திரை.

இவ்வாறுகிய பரிசமுதலான தன்மாத்திரைகளிலொவ்வொருகுண மதிகமதிகமாகக் கூடியிருக்கையால், வாயுவாதி பூதங்களிலுமொவ்வொரு குணமதிகமெனவறிக.

இந்தச்சத்தாதி தன்மாத்திரைகள் ஆகாசாதி பூதங்களுடைய சூக்குமாவத்தைச் சத்தாதிதன்மாத்திரையிலே நின்றும் ஆகாசாதி பூதங்களுண்டாம்.

ஆகாயம் சத்தத்தன் மாதிரையிலேயுண்டானதா, யிடங்கொடுப்பதாய்த், தூலமாய்ச், சுத்தமாய், வன்னரூபமாய்ச், சத்தத்தைக்குணமாயுடையதாயிருக்கும்.

வாயு, சத்தத்தினுக்குப் பேரிமுதலான நிமித்தமொழிந்து குணியல்லதாய்ப், பரிசதன்மாத்திரையிலே யாரம்பிக்கப்பட்டதாய், உஷ்ணமு மநுஷ்ணமுமல்லாத பரிசத்தையுடையதாய்ச், சத்தத்தையுடையது; இது பிராணன், அபானன் முதலாக வநேகபேதமுடையதாய்த் திரட்டுதலென்னுந் தொழிலைப்பண்ணும்.

அக்கினி, ரூபதன்மாத்திரையிலுண்டானதாய்ச், சிவந்தரூபத்தையுடையதாய்ப், பிரகாசரூபமாய், உஷ்ணபரிசத்தையுடையதாய்ச், சத்தத்தையுடையதாய்ப், பாகத்தைப் பண்ணுவதாயிருக்கும்.

அப்பு, ரசதன்மாத்திரையி லுண்டானதாய், வெண்ணிறத்தையும் ரசத்தையுங்குளிர்ந்த பரிசத்தையுஞ் சலசலசத்தத்தையுமுடையதாய், நெகிழ்ச்சியாய்த், தூள் முதலியவற்றை வலியவுண்டையாகப்பண்ணுவதாயிருக்கும்.

பிருதுவி, கந்ததன்மாத்திரையிலுண்டானதாய்ச், சுகந்த துர்க்கந்தங்களையு மதுரமுதலானவாறு ரசங்களையும் வெண்ணிறமுதலிய நாலுவித வன்னங்களையுஞ் சூரியன் அக்கினி முதலியவைகளின் கூட்டுறவின் பாகத்திலுண்டானதாய், உஷ்ணமுமநுஷ்ணமுமல்லாத பரிசத்தையுங் கட கடசத்தத்தையுமுடையதாய்க், கடினதாரகரூபமாயிருக்கும்.

இந்த பஞ்சபூதங்களொன்றி லொன்றுண்டாகாது காரணகுணங் காரியத்திலே வரவேண்டுமென்னும் வாக்காலென்க.

தத்துவமாவது, பிளயமட்டாக விருக்கிறதாகையாற் சரீராதிகள் தத்துவமல்ல பூதவிகாரமாம்.

இச்சிவ தத்துவமுதற் பிருதுவிதத்துவமீறான மூப்பத்தாறுஞ் சாதாரண மசாதாரணமென்றிருவகைப்படும்; சாதாரணமாவது புவனத்திற்கா தாரமாய்த் தூலமாயிருக்கும்; அசாதாரணமாவது, சூக்குமரூபமாய் ஞானக்கிரியை விளக்குவதாக வான்மாக்கடோறும் வெவ்வேறாயிருக்கும்.

இனிச், சுத்தமாயாகாரிய மைந்திற்குஞ் சிவதத்துவமென்றுஞ், சுத்ததத்துவமென்றுஞ், சுத்தாத்துவாவென்றும், பிரேரககாண்டமென்றும் பெயர்.

மாயாதிகளேழுக்கும் வித்தியாதத்துவமென்றும், ஈசுவாதத்துவமென்றும், போக காண்டமென்றும், மிச்சிராத்துவாவென்றுஞ், சுத்தாசுத்த தத்துவமென்றும் பெயர்.

சித்தமுதலான விருபத்துநான்கு தத்துவங்களுக்குமான்மதத்துவமென்றும், அசுத்ததத்துவமென்றும், போக்கியகாண்டமென்றும் அசுத்தாத்துவாவென்றும் பெயர்.

இந்தத்தத்துவங்களால் வருங்காரியங்கள் சாதாரணமென்றும், அசாதாரணமென்றும், பொதுச்சிறப்பாகிய உபையரூபமென்றுமூவகைப்படும்; இவற்றிற் புவனங்களெல்லார்க்கும் போகவேதுவாகையாற் சாதாரணமாம். பஞ்சதன்மாத்திரைகள், மனவகங்காரபுத்திகளிந்த வெட்டுதத்துவங்கள் கூட்டுறவினுலுண்டான புரியட்டகதேகம் அவாவர்களுக்குப் போகவேதுவாகையால் அசாதாரணமாம். இந்தப்புரியட்டகதேகத்திலே நின்றுமான்மாவொருலோகத்திலே போக்குவரவுடையவனுவன். ஸ்திரீமுதலியவருடைய தூலதேகம் அவர்களுக்குப் போகத்துக்கு ஏதுவுமாய்க் கணவனுக்குப் போக்கியமுமாயிருக்கையாலுபையரூபமாம். இவ்வாறு மற்றைத்தேகங்களுமுபையரூபமெனவறிக.

இனித், தூலதேகமானது சூக்குமபூதங்களைவிட்டு நீங்காமன்மாதாபிதாக்களுடைய சுரோணித சுக்கிலங்களுடனேயுண்டாம்.

அவ்வாறுண்டாகுமாறு, எலும்பு, மாமிசம், மயிர், துவக்கு, நகம், தந்தம், நரம்பு இவை முதலியன சூக்குமபிருதுவியிலும்; மூத்திரம், ரத்தம், கபம், வேர்வை, சுக்கிலமிவைமுதலியன சூக்குமமானவப்புவிலும்; இருதயதாபங் கண்களிற் பித்தபாக முதலானவைசூக்குமமானவக்கினியிலும்; பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் இவைபத்துஞ் சூக்குமவாயுவிலும்; ஆகாசமானது, சூக்குமாவகாசத்திலுமுண்டாம். இவ்வாறு சூக்கும பூதத்தினின்றுந் தூலதேகமுண்டாமெனவறிக.

இவ்வாருணவமாயை கன்மங்களாலே தத்துவதாத்துவிகமானசகலபந்தங்களுடனுங் கூடினசகலருக்கு முன்சொன்ன கேவலாதியவத்தைகள் சாக்கிராதியாக வொவ்வொன்றைந்து வகையாகப் பதினைந்து பேதப்படும்,

கேவலாவத்தைதையைந்திற் சகலாவத்தைதையைந்திற்கு மிலக்கணம்வரு மாறு;

கேவலத்திற் சாக்கிரஞ், சொப்பனஞ், சுழுத்தி, துரியந், துரியாதீத மென்றைந்தவகையாகும்.

கேவலத்திற் சாக்கிரமாவது; ஆன்மாமுப்பத்தாறு தத்துவங்களுடனுந் தாத்விகங்களறுபதுடனுங் கூடச் சகல விடயயோகங்களையுமநுபவித்துக்கொண்டிருக்கும் வேளையிலே போகவேதுவான கன்மமில்லாதிருக்கையாற் பிரேரககண்டமாகிய சுத்ததத்துவங்களைந்தும்,போககாண்டாமாகிய காலாதிகளேழும், பிருதிவிமுதலான பூதங்களைந்துமாகப் பதினேழு நீங்கச் சுரோத்திரமுதலாகிய ஞானேந்திரியங்களைந்தும், வாக்குமுதலாகிய கன்மேந்திரியங்களைந்தும் சத்தமுதலாகிய தன்மாத்திரைகள் ஐந்தும், வசன முதலாகிய தாத்விகமாகிய வசனாதிகளைந்தும், பிராணன் முதலாகிய தாத்துவிகமாகியவாயுக்கள்பத்தும், மனமுதலாகிய வந்தக்கரணங்கள் நான்குமாகிய முப்பத்துநான்கு கருவிகளுடனுங்கூடிக் கேத்திரிகனுகிய வான்மாவுங்கூடமுப்பத்தைந்தாய்ச்சாக்கிரதானமாகிய லலாடத்திலேநின்று மேற்கூறிய பிரேரிக்கிற தத்துவமும் புசிக்கிறதத்துவமுந்தாரகமாகிய பூதங்களுநீங்குகையால் ஆணவமலமேலிட்டுக் கண்டுங்காணுமற்கேட்டுங்கேளாமன்மயங்கி யிருக்குமவதாமாம்,இது அறிவில்லாச்சாக்கிரம்.

புறம்பேவிடயங்களைக்கிரிக்கு ஞானேந்திரியமைந்துங், கன்மேந்திரியங்களைந்துமாக இப்பத்து நீங்கநின்ற சத்தாதியைந்தும், வசனாதியைந்தும், பிராணாதிவாயுபத்தும், மனாதியந்தக்கரணநான்கும், கேத்திரிகனுமாகிய விருபத்தைந்துங் கண்டத்தானத்திலேநின்று சாக்கிராவத்தையிலே நின்றனுபவித்த போகத்தை நினைக்கவுந் தற்காலத்திலே வருஞ் சூக்கும தேகபோகமாகிய ஆனையேறிமாலைசூடுதன் முதலியவற்றையனுபவிப்பது கேவலசொப்பனம்.

முற்கூறிய சொப்பனவத்தையிற் கூடியிருந்த விருபத்துநான்கு கருவியில் இருபத்திரண்டு நீங்கநின்ற சித்தமும் பிராணவாயுவுங்கேத்திரிகனுங் கூடியிருதயதானத்திலே நின்று சுகமாய்த்தூங்குவது கேவல சுழுத்தி.

சித்தமுநீங்கவுச்சுவாச நிச்சுவாசம் பண்ணிக்கொண்டு தேகத்துக் காவலாயிருக்கிற பிராணவாயுடன் கேத்திரிகனுங் கூடிநாபித்தானத்திலே நின்று, ஒன்றுந்தெரியாமற் றூங்குவது கேவலதுரியம்.

பிராணவாயுவைநீக்கிக் கேத்திரிகனாகிய ஆன்மாவொருவனேதனித்து மூலாதாரத்திலே யாணவமலத்துடனே கூடியோரறிவுமற்றிருப்பது கேவலதுரியாதீதம். இந்தவதீதவவத்தை தானே நித்தியகேவலவவத்தையாம்; இவற்றிற்குக் கீழாலவத்தையென்றும் பெயராம்.

சகலத்தின் மத்தியாலவத்தையாவது:— இலாடத்தானட்திலே நின்று ஆன்மாச் சகல விடயங்களையுமனுபவிக்கிற வேளையிலே கல்லெறிமுதலியவைகளாலுஞ் சிசுமாணங்கேட்பது முதலியவைகளாலுந் திடுக்கிடப் பிராணவாயுஞ் சீவியாமலொன்றையுமறியாமன் மூர்ச்சித்து மயங்கி நின்றவவதரஞ் சாக்கிராதீதம்.

அற்பமாகப்பிராணவாயு சீவித்துப் பெருமூச்செறிவது சாக்கிரத்திற் றுரியம்.

சித்தத்துடனும் பிராணவாயுவுடனுங் கேத்திரிகன் கூடித் துக்கமாத்திரத்தையறிவது சாக்கிரத்திற் சுழுத்தி.

ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும், பிராணாதிவாயுக்கள் பத்தும், அந்தக்கரணநான்கு, மாகவிருபத்துநான்குடன் கேத்திரிகனுங்கூடியிருபத்தைந்தாய்த் துக்கமிதனாலே வந்ததென்ற துர்ச்சிந்தையுடனே துக்கத்தையனுபவிப்பது சாக்கிரத்திற் சொப்பனம்.

தத்துவ தாத்துவிகங்களெல்லாவற்றினுங் கூடிச்சர்வவிடயங்களையுமநுபவிப்பது சாக்கிரத்திற் சாக்கிரம்.

சகலாவத்தையுடையவனாகிக் கலையினாலே விளங்கப்பட்ட ஞானக்கிரியா சொரூபமான னசதன்னியத்தையும் வித்தையினால் விளங்கப்பட்ட விடய ஞானத்தையும், இராகத்தினாலே விடயத்திலேயிச்சையுங், குணரூபமான பிரதானத்தினாலும் புத்திமுதலான காணசமூகத்தினாலும் அவற்றின் காரியங்களாற் போதிக்கப்படும் புருடனாகி, நியதியுடன் கூடுகையாற்றன் புசிக்கப்பட்ட பேகங்களிலே நியமிக்கப்பட்ட காலத்திலே அந்தக்காலத்தி லெண்ணப்பட்டபோகத்திலே மோகிதனாகி, யிவ்

வாறு தத்துவகலாபந்தங்களுடையனாய்க், கிஞ்சித்துவமுள்ளவனாய்த், தூலசூக்குமதேகங்களுடன் கூடினவனாய், மாயாபோகங்களிலே கூடித் தன்வயனாகித், தேகாதிகளே தானென்று விசாரித்து மூடனாகித்திரிகிற காலத்தில், வேதபாகியமான சமயங்களிலேயிருந்து பண்ணின புண்ணிய விசேடங்களினால் வேதத்துக்குள்ளாயிருக்கிற சமயங்களையடைந்து, அவைகளிலிருந்து பண்ணின புண்ணிய விசேடங்களினாலே, அவற்றின் விசிட்டமான வைதிகசைவ சமயத்தையடைந்து, சமயவிசேடதீக்கை பெற்றுச்சாலோகாதிகளையடைந்து, அங்கே விரத்திவந்து, புண்ணியபூமியிற்செனித்துக் கிரியைமுதலிய வற்றையநுஷ்டித்து அவைகளினாலே யிருவினையொப்பு மலபரிபாகம்வர, நிவிர்த்திமுதலிய மந்திரசத்தியும் பதிய, நல்லாசிரியனைத் தேடுங்கால், வாக்குமனாதீதமா யிருக்கிற சிவமே கிருபையினாலே கிருதகாடிந்நியம்போல் ஆசாரியனாகக் காணப்பட்டுத் திருநோக்குமுதலியவற்றால் மந்திராதி பஞ்சாத்துவாகற் பிதநிவிர்த்தியாதிகலைகளைச்சோதித்துப்,பாசச்சயம்பண்ணிப், பரிபாகத் துக்கீடாகச் சுத்தாத்துவிலே யிருக்கயோக்கியனாகச்செய்து சச்சிதானந்த சிவமாகப்பண்ணும்.

உத்தமவிலக்கணனான ஆசாரியன் உத்தமலிக்கணனாயிருக்கிறசீடனுக்குச் சாத்திரத்திலே சொன்னபடி சமயவிசேட நிருவாணவபிடேகங்களைப் பண்ணுவன்; அவன் ஆலோகனஞ்செய்தமாத்திரத்திலே பரமானந்தமுண்டாகும்; அவனே ஞானசாரியனெனவறிக.

அவ்வாசாரியன் சத்திநிபாதமுடைய தீவிரதரபக்குவனுக்குச்சாம்பவதீக்கை பண்ணுவன்.

சாம்பவதீக்கையாவது:—ஞானதீக்கை கிரியாதீக்கை யெனவநேக பேதமாயிருக்கிற நிருவாணதீக்கையினும் வேறாய்ச் சிவசீவர்களுடைய தாதான்மியத்தை விளக்குவதெனவறிக.

இவ்வாறு சாம்பவதீக்கை பெற்றுச் சிவசொரூபமான ஆசாரியனாலே இந்திரிய வேடருடன் கூடிய நம்மிலநந்நியமானவுனது சொரூபத்தை யறிந்தையில்லை நாமே நீயாவாயென்று போதிக்கப்பட்டவன்றான் சிவனைக்காட்டினு மநந்நியனென்றுசிந்தித்தல் தெளிதல்செய்து, ஆணவாதி பாசங்களை நீக்கிச், சச்சிதானந்த சொரூபமான சிவத்தையே யநந்நியமாகச் சாட்சாத்கரித்து, அதிலே யழுந்தி யநுவேபாய்க், காசமற்றகண்

சூரியப்பிரகாசத்துடன்கலந்து பின்னொன்றுங் காணாததுபோலப் பசுகரணஞ் சிவகரண மாகையாலே நின்மல சாக்கிராதியான சுத்தாவத்தைகளைப் பொருந்துவன்; அவை வருமாறு ?

நின்மல சாக்கிரமாவது:—நின்மலசாக்கிராவத்தைக்குத் தானமாகிய இருதயத்திலே சிவசத்தியுடனே கூடுதலால், உப்பளத்திலே விழுந்தது உப்பாமாறுபோல, ஜீவீபூதமாய், அகர வுகர மகார விந்து நாதங்களுடன் கூடிய மனம், அகங்காரம், புத்தி, சித்தம், உள்ளம் என்னும் அந்தக்கரண மைந்துடன் கூடினவாகிய இந்திரியங்களாற்காணப் பட்ட சத்தாதி விடயங்களைச் சிவாகாரமாகவும் விடயசுகங்களைச் சிவானந்தமாகவுமனுபவிப்பது நின்மல சாக்கிரமாம்.

நின்மல சாக்கிராவத்தைக்குக் காரணமான அகாரம் உகாரத்திலும், புறம்பே விடயங் களைப்பற்றுமனம் அகங்காரத்திலுங், கிரியாசத்தி ஞானசத்தியிலுமொடுங்க, அகங்காராதி நான்குடனும் அதற்குப் பிராணாகிய ஞானசத்திமுதல் நான்குடனுஞ் சொப்பனாவத்தைக்குத் தானமாகிய கண்டத்தானத்திலே அந்தக்காரண விருத்தியுடன் சிவோகம் பாவனை பண்ணி நிற்பது நின்மல சொற்பனம்.

நின்மல சொப்பனவவத்தைக்குக் காரணமாகிய உகாரம் மகாரத்திலும், நானென்றுதிரிக்கிற வகங்காரம் புத்தியிலும், ஞானசத்தி இச்சாசத்தியிலும் ஒடுங்கப், புத்திமுதன் மூன்றும் அவற்றைப் பிரேரிக்கு மகாராதி மூன்றும் அவற்றிற்குப் பிராணாகிய இச்சாசத்தி முதன் மூன்றுடனுஞ் சுழுத்தித்தானமாகிய மூலத்திலே தேகவிந்திரிய வியாபாரமற்று வாசாமகோசரமாய ஞாதுருஞான ஞேய மூன்று மூன்றுகச் சுகத்தையனுபவித்து நிற்பது நின்மல சுழுத்தி.

நின்மல சுழுத்தியவத்தைக்குக் காரணமான மகாரம் விந்துவிலும், பகுத்து நிச்சயிக்கிற புத்தி சித்தத்திலு மொடுங்கச் சித்தமுதலாகிய விரண்டும் அவற்றைப் பிரேரிக்கிற விந்துநாதங்களும் அவற்றிற்குப் பிராணாகிய ஆதி பரை யென்னு மிரண்டு சத்திகளுடனுந் துரியாவத்தைத் தானமாகிய புருவமத்தியிலே நின்று, தேகேந்திரியவந்தக்காண வியாபார மொன்றுமற்றுக்கேவல ஞானமாத்திரமாயிருப்பது நின்மல துரியம்.

நின்மலதுரியாவத்தைக்குக் காரணமான விந்துவும் அர்த்த நாதமும் குடிலையிலுஞ், சித்தம் 'பிரகிருதியிலும்' ஆதிசத்தி பராசத்தியிலுமொடுங்க, நின்மல துரியாதீதவவத்தைக்குக் காரணமாகிய அநாதநாதமென்னும் பராசத்தியுஞ் சிவானந்தானுபவியாகிய சொரூப ஞானமாகியவுள்ளமுமடங்க நின்மல துரியாதீத வவத்தைக்குத்தானமாகிய பிரமாந்திரத்திலே அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சிவானந்தானுபோகத்தை யிறண்டறப்பெற்றிருப்பது நின்மலதுரியாதீதம்; இதுவே, உன் மனைக்கு மேற்பட்டிருக்கிற மோக்ஷம்.

இந்தநின்மல சாக்கிராதீதத்தைப்பெறவே நிவிர்த்திமுதலான பஞ்சகலைகளும், அன்னமய முதலான பஞ்சகோசங்களும், அகாராதி சூக்குமபஞ்சாக்ஷரமும், நகாராதி தூலபஞ்சாக்ஷரமுஞ், சத்தியோசாதாதி பஞ்சமந்திரங்களும், பிரமன்முதலான பஞ்சகர்த்தாக்களுஞ், சுத்தவித்தை முதலான பஞ்சதத்துவங்களும், உள்ளத்துடன் மனமுதலான வந்தக்கரணங்களைந்தும் வைகரி முதலான வாக்குக்களைந்துங், கிரியாசத்தி முதலான பஞ்சசத்திகளும், ஆணவாதிபஞ்சபாசங்களுஞ், சர்வவுபாதிகளுநீங்கும்.

இவ்வாறு நின்மலதுரியாதீதவவத்தையை யொருபசுக்கறக்கிற நேரமாயினும், வில்லம்பு பூமியில் விழுகிற நேரமாயினுங் கண்ணிமை பொருந்துநேரமாயினும் பெற்றவர் பூமியின் மீளப்பிறவார்; இவ்வாறு நிட்டைகூடியவர்க்கு விதிநிடேத புண்ணியபாவ மொன்றுமில்லை; இவர் செய்த புண்ணிய பாவமிவர்க்கிதாகிதஞ் செய்பவனுக்குச் சாரும். இவ்வாறு நின்மலசாக்கிராதியனுபவித்துக்கொண்டு சீவன்முத்தராயிருந்து தேகாந்தரத்திலே பரமமோட்சத்தையடைவர்.

---

இனி, பரமதத்தை நிராகரி யாதிருக்கிற் றன்மதம் பிரதிட்டையாகாதென்கிற நியாயத்தாற் பரது மோக்ஷத்தை நிராகரித்துச்சித்தாந்தத்திலே முத்திசொரூபங் கூறுவாம்.

சாருவாகன் முதலானவர்கள், தங்கடங்கள் புத்திக்குத் தக்கதாக வெவ்வேறேமோக்ஷம் நிரூபிப்பார்கள்; சௌத்திராந்திகன் சகலமாயிருக்கிற துக்கங்களுக்குங் காரணமாயிருக்கிற தேகமென்கிற அவாவிடைய

நாசமே பாமுத்தியென்றும், பௌத்தரிலே சிலர் உபத்திரமற்றிருக்கிற சித்தசந்ததியே மோக்ஷமென்றுஞ், சிலர் சித்தசந்தான மற்றுப்போவதே பரமமோக்ஷமென்றும், ஆருகதனெப்போது மேலேபோகிறதே பரம மோக்ஷமென்றுஞ், சாங்கியர் பிரகிருதியின் விகாரங்களுடைய வியாபார மற்ற வளவிற் புருடனுக்குச் சொரூபமாயிருக்கிறதே பரமமோக்ஷ மென்று கூறுவர்.

யோகர் சாத்துவிகமாயிருக்கிற பிரகிருதி யோகமே பரமமோக்ஷ மென்றும்; அவரவர்கள் பத்தர்கள் கணபதி, இந்திரன், சூரியன், பிரமா, விட்டுணு, ருத்திரனிவர்களுடைய சாலோக்கியஞ் சாமீப்பியஞ் சாரூப் பியஞ் சாயுச்சியமே பரமமோக்ஷமென்றும்; சிலர் சீவான்மாவுக்குப் பா மான்மாவிலே லயிக்கிறது பரம மோக்ஷமென்றும்; நையாயிகர் அத்தி யந்தமான துக்கமற்றுப்போகிறது பரம மோக்ஷமென்றும்; பாட்டாச மயிகள் நித்தியமான சுகம் விளங்குவதே பரமமோக்ஷமென்றுஞ் சொல் வர். சிலர் முத்தியிலே யான்மாக்களுக்கெல்லாங் கிரியாசத்தி விளங்கு கிறது மாத்திரமன்று, பின்னென்னெனிற்? கிருத்தியம் பண்ணுகிறது முண்டு; சிவன் தனக்கொத்திருக்கிற முத்தான்மாவிலே சகத்துண்டாக்கு கிறது கூடுமென்றும், மறைகையினாலே கர்த்தாவல்லவாகையாற் கர்த்தா வாயிருக்கிற சிவனைக்காட்டிலும் அதிக கிருத்தியம் பண்ணுகிறது பரம மோக்ஷ மென்றுஞ் சொல்வர்; சிலர் சர்வக்கியனாயிருக்கிற வீசுரனைக் காட்டினு முத்தனுக்காதிக்க மிருக்கப்பெற்றுச் சர்வகர்த்தாவாயுஞ் சர் வக்கியனாயுமிருக்கிற சிவனுடனே சரியாயிருக்கிறது முத்தியென்றுஞ் சொல்லுவார்.

இன்னுஞ் சாமீப்பியத்தை நான்காகச் சொல்வார்கள்; எவ்வாறெ னில்? பாசுபதர்கள் ஈசுரனிடத்திலேயிருக்கிற சருவக்கியத்துவம் ஆன் மாவினிடத்திலே சங்கிரமிக்கிறது பரமமோக்ஷமாமென்றும்; மகா விரதர் தமக்கு அப்போது சர்வஞ்ஞத்துவமுண்டாகிறது பரமமோக்ஷ மென்றும்;சிலர் சர்விக்கியனாகையின் சமாவேசமே பரமமோக்ஷமென்றும்; சைவ ஏகதேசிகள் சத்தியமாய் மலத்திலே யாவரிக்கப்பட்டிருக்கிறதினாற் சர்வக்கியனாகைக்குஞ் சர்வகர்த்தாவாகைக்குந் தடையான மலம்போகை யினாலே விளங்குகிறதே பரமமோக்ஷமென்றும்; மாயாவாதிகள் அநிர் வசனமான அவித்தியா நிவிர்த்தியினாலே ஆநந்தத்தைப் பெறுதல் பரம மோக்ஷமென்றுங் கூறுவர்; இவைகளெல்லாம் பரமமோக்ஷமல்ல.

சரீரநாசஞ், சித்தசந்தானங்கெடுதல், சீவலயஞ், சொரூபாவத்தா
னம், அத்தியந்தமானதுக்கங்கெடுதல் இவைபரமபுருடார்த்தமல்ல, அறி
யப்படாதிருக்கையால்; அறியப்படாதது புருடார்த்தமல்லாதது; ஆகை
யாற் சரீரநாசஞ், சித்தசந்தானங்கெடுதல், சீவலயமென்னு மூன்றுமறி
கிறவனேயில்லாமற்போகையால், மற்றைச்சொரூபாவத்தான முதலான
மூன்றிலுஞ் சரீரமுதலானவைகள் அங்கீகரியாதிருக்கையாற் சுயம்பிர
காசமாக வங்கீகரியாதிருக்கையால், அறிகிறது கூடாதிருக்கையால்,
காணுபத்தியமுதலான சாரூப்பியாதிகளுக்கும் புராணங்களிலு மாகமங்
களிலு மோக்ஷமென்று சொல்லப்பட்டாலுஞ் சரீரபந்தமுண்டாகையா
லஃதுள்ளபொழுதே துக்கமுதலானவையும் அவசியம் வேண்டுகையால்,
அச்சரீரங்காரியமாகையினாலே, அவசியங்கெடுதல் கூடுகையால், முத்
தனுக்குத் திரும்பச்சென்மம் வர்த்திக்கையினாலே, திரும்பச்செனியா
திருக்கிற பரமபுருடார்த்தமான பரமமோக்ஷமாகைகூடாது; பின்னையா
தெனில்? குணமுத்தியாதல் கூடுமாகையினாலே அதுவும், தானேயெப்
பொழுதும் ஊர்த்துவ கமனஞ் சாத்தியமாயிருக்கிற பிரகிருதிபோகமும்,
பரமமோக்ஷமாகை கூடாது; இவைகளிரண்டுஞ் சரீரமாகையினாலே முன்
சொன்ன பக்ஷத்திலேயுள்ள தூடணங்களிவற்றிற்கும் வருகையால், உப
த்திரவமற்ற சித்தசந்ததியும் அப்பிரமாணியமாகையினாலும், புருடனா
லே யபேக்ஷிக்கப்படாதிருக்கையினாலும், பரமமோக்ஷமல்ல; சிவனைக்
காட்டினுமதிகமாகை யொருக்காலுங்கூடாதாகையாற், சீவாதிக்கமும்
பரமமோக்ஷமல்ல; சங்கிராந்தரூபமாகிய சாம்மியம் சீவனிடத்திலே
ஞானமில்லாமற் போகப்பண்ணுகையால் அதுவும் போக்கியமல்ல; ஆத
லாற் பரமமோக்ஷமல்ல; உற்பத்திசாம்மியமும், அநித்தியமாகத் தெரி
கையாற் கூடாது; ஆகையால் பரமமோக்ஷமல்ல, ஆட்சேபமான சாம்மி
யம் முத்தனுடைய ஞானத்தைத்தெரியாதபடி பண்ணுகையால், அபே
க்ஷிக்கப்படாதிருக்கையாற், பரமமோக்ஷமல்ல; சைவ ஏகதேசிகள் சொல்
லுகின்றவேறேயொரு படித்தான சாம்மியம், ஏகதேசத்திலே யொப்பாகி
எல்லாருக்குஞ் சாதாரணமாகையால், சாமீபம் ரூபமல்ல, எல்லா மொக்
தார்த்தமாயிருக்கிற முத்தியென்கிறதிற் சங்கையேயில்லை; நித்தியமான
சுகம் விளங்குமென்கிற பக்ஷத்திலே விளங்குதலாவது ஆணவம் அபி
பலப்படுவது மாத்திரமாகில் அப்போது நமது மதத்தைப்பிரவேசித்த
தே. ஞானம் அப்போதாகில் அநாதியாகிற புருடார்த்தமல்ல; உண்
டானதாகல் அநித்தியமாகும்; அநிர்வசனீயமான அவித்தியையிலே பிர

மாணமில்லா திருக்கையால் மாயாவாதிசொல்லுகிற முத்தியும்பரமமோக்ஷ மல்ல; பின்னைப்பரமமோக்ஷம் யாதெனில்? ஆவாரகமாயும், விட்சேபமாயு மிருக்கிற மலமாயாதிபாசச்சயத்திலே பரமானந்தமான சிவதா தான்மியத் தினுடைய அபிவியாப்தியே பரமோக்ஷமாம்.

இனி, மோக்ஷசாதனம், ஞானம், பிரபத்தி, வைராக்கியமென மூன்று. இவற்றின்ஞானமாவது—தத்துவரூபந், தத்துவதெரிசனந் தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபஞ், சிவதெரிசனஞ், சிவயோகஞ் சிவபோகமிந்தத்தசவிதந்தையுங் குருகடா க்ஷத்தினலேயறிந்து அநுபவமாயிருக்கிற சிவபோகமேயெனவறிக.

இவ்வாறு கூடுவதரிதாகில், எங்குஞ்சிவம் வியாபகமாயிருக்கிற தையு, மவனிடத்திலே யெல்லாமிருக்கிறதையு மவனருள்வழித்தன்றி யொன்றுயினுமறிய முடியாதென்பதையு மறிந்து, அவனேவற்படி செய் கிறேமென்று எல்லாப் போகத்தையுஞ் சிவார்ப்பணம் பண்ணி நாமொரு வனே வற்பணிசெய்கையால், நமக்குப் புண்ணியபாவமென்று தன்னைப் பின்னிட்டுச் சிவனை முன்னிட்டுக்கொண்டு அவனுடைய வாதீனனுகிப் பஞ்சாக்கரத்திலே திரிபதார்த்தத்தினுண்மையையறிந்து பாசத்தைக் கீழாக்கிப் பாசிவத்தை முன்னுக்கி விதிப்படியுச்சரித்துக்கொண்டு வாச னுச்சயம்பண்ணி, விற்பனனுகியிருப்பதாகப் பாவித்துத் தான்செய் கின்ற கிரமத்திலே முன்சொன்ன சிவானுபவங்கூடும். இதுவுமரிதாகிற் குருலிங்கசங்கமத்திலே வழிபட அஞ்ஞானம்போய்ச் சிவஞானம் பிர காசித்து, முன்சொன்ன சிவானுபவம் பெற்றிருப்பன்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.

ஞானமிர்தக்கட்டளை
முற்றிற்று.

எ-வது பக்கத்திற் கூறிய ஆணவத்தின் பெயர் வேறுபாடும் பொருளும்.

ஆவிருதி—பிரச்சன்னபடம் போல மறைப்பது. ஆவரணம்—பித்திகைபோல மறைப்பது. அவித்தை—அறிவின்மையுடையது. மிருத்திபு—மரணக்குறியைக்காட்டுவது. மூர்ச்சை—செயலற்று கிடத்தலைச்செய்வது. பசுத்துவம் — ஆன்மாவின்றன்மையாயிருப்பது. மலம்—அழுக்குடையது. அஞ்சனம்—களங்கத்தையுடையது. பாசம்—கயிற்றையொத்திருப்பது. தமசு—தன்னையுஞ் சிவத்தையுமறியவொட்டாமல் அந்தகாரம் போன்றிருப்பது. ஜென்மபீசம்—ஜனிப்பதற்கு மூலமாயிருப்பது. மூலமலம்—அடிவேர்போல மலமாயிருப்பது. மோகம் — மயக்கத்தைப் பண்ணுவது. பந்தம்—கட்டுவது. அசுத்தி—சுத்தமில்லாதது. அஞ்ஞானம்—அவித்தை சகசமலம்—இயற்கையாயுள்ளது. திமிரம்—தமசு. க்ஷயம்—குறைவுசெய்வது. வியாகதம்—கேடுசெய்வது. சடம்—அறிவில்லாதது. நிரோதம்—தடையாயுள்ளது. கிலாணிபாவம்—வாடுந்தன்மையைச் செய்வது. ஆணவம்—வியாபகமாகிய வுயிரையணுத்தன்மைப் படுத்துவது. இவ்வாறிந் நூலிறுதியிலெழுதப்பட்டிருக்கிறது.

---

இந்நூல்செய்தார் பெயர் கால முதலியன எழுதப்படவில்லை. திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தில் எனக்குக்கிடைத்த கால முதலிதுவரை யிருப்பத்தைந்து வருடமாக வைத்திருந்து வேறுமொரு பிரதிதேடிக்கொண்டிருந்தேன்; கிடைக்கப்பெறுமையால் இன்னுங் காலத்தைக்கழிப்பது சிதமன்றென்று நினைத்துச், சைவசித்தாந்த நூல் கற்கப்புகுவோர்க்குச் சிவப்பிரகாசக்கட்டளை, திருவாலவாய்க்கட்டளை முதலிய கட்டளைகட்கெல்லாஞ் சிறப்புடையதாயிருத்தலாற் பேருபகாரமாகுமென்று கருதிச் செந்தமிழ் வாயிலாக வெளியிடுவித்தேன். இனி, யிதனினுஞ் சிறந்தபிரதி கிடைப்பதாயின் ஒப்புநோக்கித் திருத்தங்களை வெளியிடுகின்றேன்.

இங்ஙனம்,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.